
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1148

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

49

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

**2009**-ஆம் ஆண்டு, டிசம்பர் 25-ஆம் தேதி, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தின் தலைப்பு ‘செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-1’ பிறகு, தொடர்ச்சியாகப் பல கடிதங்களை எழுதினார்.

‘ஒப்பற்ற முறையில் நடக்கவிருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு கடிதங்களைக் கொண்டு, ஒரு தோரணவாயில் அமைக்கின்ற ஆர்வத்தோடு, நான் கொட்டிவைக்கும் கற்குவியல் இது’ என அவர் எழுதிய அந்தக் கடிதங்களில், ‘தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழ் செம்மொழி தகுதிக்குரியது’ என்பதை 150 ஆண்டுக்காலமாக மொழியியல் அறிஞர்கள் நிகழ்த்திய போராட்டத்தினை விளக்கியிருப்பார். அந்த வரலாற்றில் தமிழ் மொழிக்கு, செம்மொழி என்கிற தகுதியைக் கொண்டு சேர்த்ததற்குப் பின்னால், பல தமிழறிஞர்களின் முனைப்பையும் உழைப்பையும் பெருமையுடன் விளக்கியிருப்பார்.

அந்த வரலாற்றின் வழியாகவும், அதை எடுத்தெழுதிய பிற அறிஞர்களின் நூல்கள் வழியாகவும், இறுதியாக கலைஞரின் கடிதங்கள் வழியாகவும் நாம் அறிய வருவது, அந்த 150 ஆண்டுக்கால போராட்டம் முடிவுக்கு வந்தது, அது கடைசியாக கலைஞரின் கைகளில் வந்தபோதுதான். அதற்கு அவர் நடத்திய பல முனை முயற்சிகளே இறுதியாகத் தமிழுக்கு ‘செம்மொழி’ மதிப்பினைக் கொண்டு வந்தது.

## தொடங்கிவைத்த கால்டுவெல்

1856-ஆம் ஆண்டு, ‘தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்’ எழுதிய கால்டுவெல், ‘திராவிட மொழிகள் அனைத்திலும் உயர் தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னிடையே இடம்பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு, அவற்றின் துணையே சிறிதும் வேண்டாமல் வளம்பெற்று வளர்வது இயலும்’ எனத் தமிழ் தனித்தியங்கும் என்பதற்கான ஆதாரங்களை அளித்தார். அறிஞர் கால்டுவெல் அவர்களின் ஆழ்ந்த ஆராய்ச்சி அடிப்படையிலான நூல்கள்தான், தமிழ்நாட்டில் பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்துக்கு ஊக்கமளிப்பதாகவும் அமைந்தன.

தமிழ், தமிழர் நாகரிகம், தமிழர் பண்பாடு ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த பற்றின் அடிப்படையில்தான், 1968-ஆம் ஆண்டில், பேரறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்போது, அவரது திருவுருவச்சிலை சென்னையில் திறக்கப்பட்டது.

1902-ஆம் ஆண்டில், பரிதிமாற்கலைஞர் ‘தமிழ் செம்மொழியே’ என முழங்கினார். 1918-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15-ஆம் தேதி, சென்னை பச்சையப்பன் கல்லூரியில், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் நடைபெற்ற தமிழ்ப்புலவர்களின் மாநாட்டில் இந்தக் கோரிக்கையை வைத்துள்ளனர். “தமிழைச் செம்மொழியாக ஏற்க வேண்டும் என அரசாங்கத்துக்கு விண்ணப்பம் விடுப்பதற்குக் கூட்டப்பட்ட கூட்டம்” என அதைக் குறிப்பிடுகிறார் தனித்தமிழ் அறிஞர் மறைமலையடிகள்.

தமிழை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென, மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையினர் முயற்சிகள் மேற்கொண்டதையும் வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அன்றைய ஐ.சி.எஸ். எனப்படும் குடிமைப்பணிக்குப் பாடமாக வைக்க வேண்டும் என 1918-ஆம் ஆண்டில் தீர்மானம் நிறைவேற்றி, அரசுப்பிரதிநிதிகளுக்கும், சென்னை மாகாண கவர்னருக்கும், சென்னை, கல்கத்தா, பம்பாய், அலகாபாத், காசி, பஞ்சாப் ஆகிய பல்கலைக்கழகங்களுக்கும் அந்தத் தீர்மானங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தியா காலத்திலும் தமிழுக்குச் செம்மொழி என்கிற தகுதியைப் பெறுவதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளன.

இந்தியாவில் முதல் கல்வி அமைச்சராக இருந்த மௌலானா அபுல்கலாம் ஆசாத், 1951-ஆம் ஆண்டில், சாகித்ய அகாடமி தொடக்க விழா மாநாட்டில் உரையாற்றுகையில், ‘தமிழ் செம்மொழியே’ எனச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

# தமிழ் ‘செம்மொழி’




ஓவியம் : ரவி பேலட்

## கரந்தைத் தமிழ்ச்சங்கம்

1911-ஆம் ஆண்டில், தோற்றுவிக்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச்சங்கம், செம்மொழி வரலாற்றுக்கு மிகச் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளது. ‘செம்மொழி வரலாற்றில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தைத் தொடங்கிய தமிழவேள் உமாமகேஸ்வரனார், பரிதிமாற் கலைஞருக்கு அடுத்து அதிகம் நினைக்கப்பட வேண்டியவர்’ எனக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

1919-ஆம் ஆண்டு, கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறைவேற்றிய தீர்மானம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை மாவட்ட ஆட்சியரகம் ஆகியவற்றுக்கு அனுப்பப் பட்டுள்ளது. 1920-ஆம் ஆண்டில், தமிழறிஞர் எஸ்.சோமசுந்தர பாரதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழி வரிசையில் சேர்க்க, சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு வலியுறுத்தி தனித் தீர்மானம் போடப்பட்டுள்ளது. 1921, 1922, 1923-ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக சென்னை மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. 1938-ஆம் ஆண்டு, கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் வெள்ளி விழாவின்போது தமிழறிஞர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் தனது உரையில், ‘பெருமையும் இனிமையும் உடைய தமிழை உயர்தனிச் செம்மொழி என்ற நிலையில் அரசியலார் போற்றாதிருப்பது கவலைதரத்தக்கதாகும்’ எனப் பதிவு செய்துள்ளார்.

1919-ஆம் ஆண்டில், திருச்சியில் நடைபெற்ற பிராமணர் அல்லாதோர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று, ‘மிகப் பழைமை வாய்ந்த இலக்கியங்களைக் கொண்டுள்ள தமிழ்மொழியைச் செம்மொழியாக அங்கீகரிக்க வேண்டும்’ என்பதும், சுதந்திர

> 1974-ஆம் ஆண்டில், ‘செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்’ என ஒன்றை உருவாக்கி, அதன் முதல் இயக்குநராக பாவாணரையே நியமித்தார் கலைஞர்.

‘தமிழ்மொழி செழுமையும் தொன்மையும் மிக்க இலக்கியத்தைக் கொண்டது, இந்திய அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 14 மொழிகளில், தமிழ் செம்மொழியென அங்கீகாரம் செய்வதற்குரிய தகுதிகள் அனைத்தும் கொண்டது. அந்தத் தகுதிப்பாடுகளும் பண்டைக்காலத்தைச் சேர்ந்தவை’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

1955-ஆம் ஆண்டில், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய கீழ்த்திசை மாநாட்டில் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், தமிழுக்குச் செம்மொழி அங்கீகாரத்தை வழங்க வேண்டுமென, ஒன்றிய அரசுக்குக் கோரிக்கை எழுப்பியிருக்கிறார்.

இப்படி தொடர்ச்சியாகத் தமிழறிஞர்களும், பிராமணரல்லாதோர் இயக்கத்தைச் சேர்ந்த நீதிக்கட்சியின் முன்னோர்களும், சுதந்திர இந்தியாவுக்கு முன்னரும், பின்னருமான தமிழ் செம்மொழிக்கான நெடிய போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். அன்றைக்கு சாத்தியமான வழிவகைகளில், அறிஞர்களிடமும் ஆட்சியாளர்களிடமும், பல்கலைக்கழகங்களின் கவனத்துக்கும் கொண்டுசென்றுள்ளனர். ஆனால், அதில் சிறு அசைவியக்கமும் இல்லை என்பதே உண்மை.

## கலைஞரிடம் வந்தது!

செம்மொழிப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தை 1966-ஆம் ஆண்டில், மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள் தொடங்கிவைக்கிறார். உலகின் முதன்மை உயர்தனிச் செம்மொழி (*The Primary Classical Language of the World*) என அவர் ஆங்கிலத்தில் வெளியிட்ட நூல், செம்மொழி தகுதிக்கான அசைக்க முடியாத ஆதாரமாக இருந்தது. பாவாணர் எடுத்துவைத்த ஆதாரங்கள் அனைத்தும் பிறமொழி அறிஞர்களும், ஆங்கிலப் புலமை கொண்டவர்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இருந்தன.

1974-ஆம் ஆண்டில், ‘செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்’ என ஒன்றை உருவாக்கி, அதன் முதல் இயக்குநராக பாவாணரையே நியமித்தார் கலைஞர்.

நூற்றாண்டுகளைக் கடந்த செம்மொழிக் கோரிக்கை, கலைஞர் நிறைவேற்றித் தர வேண்டிய கடமையாக அவரிடம் வந்து சேர்ந்தது.

...தொடரும்

## ‘கத்தரி’ தாக்குதலைச் சமாளிக்குமா இந்தியா?

‘அமெரிக்கா – ஈரான் போர்ச்சூழல் காரணமாக, இந்தியாவின் இயற்கை எரிவாயு விநியோகம், எரிபொருள் விலையேற்றம் ஆகியவை சவால்களாக மாறியுள்ளன. நிலைமையைக் கையாள்வதற்கு, ஒன்றிய அரசிடம் விரிவான திட்டமில்லை’ என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

இந்த நிலையில், ஈரான் போர்ச்சூழல் காரணமாக இணைய சேவை முடங்கும் ஆபத்து உள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளரும் மக்களவை உறுப்பினருமான ரவிக்குமார். அவரது பதிவில்...

“உலகளாவிய இணையப் போக்குவரத்தில் 95 முதல் 99 சதவிகிதம் கடலுக்கு அடியில் உள்ள கண்ணாடியிழை கேபிள்கள் வழியாகவே செல்கின்றன. குறிப்பாக, உலகின் 30 சதவிகித இணையம் ‘ஹோர்முஸ் ஜலசந்தி’ வழியாகச் செல்கிறது. தற்போது தீவிரமாக இயங்கிக்கொண்டிருக்கும் போர் மண்டலத்தின் வழியாக, 20-க்கும் மேற்பட்ட கேபிள்கள் செல்கின்றன.

ஈரான் கட்டுப்பாட்டில் உள்ள, ‘ஹோர்முஸ் ஜலசந்தி’யை மீண்டும் திறக்க, ஈரானுக்கு டிரம்ப் 48 மணி நேரம் அவகாசம் கொடுத்திருக்கிறார். இல்லையென்றால், அவர்களின் மின் உற்பத்தி நிலையங்களை அழித்துவிடுவதாக மிரட்டியுள்ளார். இதற்கு பதிலடி அளித்துள்ள ஈரான், ‘எங்கள் மின் கட்டமைப்பைத் தொட்டால், இணைய கேபிள்களை வெட்டிவிடுவோம்’ எனக் கூறியுள்ளது.

வங்கிச் சேவை, தகவல் தொடர்பு, நிதிச் சந்தைத் தொடர்புகள் அனைத்தும் அந்தக் கேபிள்கள் வழியாகவே செல்கின்றன. இது இணையவழித் தாக்குதலாக இருக்காது; கத்தரித் தாக்குதல். உலக இணைய அமைப்பைச் செயல்படுத்த கேபிள் தவிர, மாற்றுத் திட்டம் எதுவும் இல்லை” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே எரிவாயு, எரிபொருள் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள இந்தியா, புதிய சிக்கல் உருவானால், அதைச் சமாளிக்கும் திட்டங்களை யோசிக்க வேண்டும்.

நாடாளுமன்றம் ஒரே குரலில் முழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார் பிரதமர் மோடி. அதற்கு எதிர்க்கட்சிகளின் ஆக்கப்பூர்வ குரலை முதலில் கேட்கட்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### கழகமே உயிர்மூச்சு!



வி.பி.எஸ். சரவணகுமார்

1980-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளியில் நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் கலைஞர் உரையாற்றும் காட்சி. மேடையில், அன்றைய சட்டமன்ற உறுப்பினர் ‘துறவி’ இளங்கோவன் அவர்கள் அமர்ந்திருக்க, தலைவருக்குப் பின்னால் நிற்கிறார், என் தந்தை, வரகூர் கிளைக் கழகச் செயலாளர் வி.பி.சுப்பிரமணியன். விழா ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்து, தலைவரிடம் பாராட்டுப் பெற்றதை எங்களிடம் பெருமையுடன் குறிப்பிடுவார். ‘மிசா’ காலத்திலும், கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரங்களிலும் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், கழகத்துக்கும் தன் இறுதி மூச்சுவரை உண்மையாகவும் உறுதியாகவும் உழைத்தவர் என் தந்தை. இந்தப் புகைப்படமே எங்களின் குடும்பச் சொத்து.

**– வி.பி.எஸ்.சரவணகுமார், ஒன்றிய அமைப்பாளர், தி.மு.க. அயலக அணி, திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### வாக்காளர்களைப் பதிவு செய்ய வேண்டும்!

1956 ஜூன் 27-ஆம் தேதி, கழகத்தின் ஏடான ‘நம்நாடு’ இதழில், கிளைக் கழகச் செயலாளர்களுக்கான அறிவிப்பினை வெளியிட்டது தலைமைக் கழகம். “கிளைக் கழகச் செயலாளர்களே, உங்கள் ஊரிலுள்ள கழகத் தோழர்கள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து கொண்டார்களா - இல்லை என்றால், அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டும்” என்று கேட்டுக்கொண்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131